சாட்சி ஆஜர் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு குறுக்குவிசாரணை

அ.சா.1 சாந்தகுமார் த/பெ.ஆறுமுகம், வயது.48 என்பவரது குறுக்கு விசாரணை

( எதிரி மனுவின் பேரில் ஆஜர் இல்லை)

எதிரியை எனக்கு எத்தனை வருடமாக தெரியும் என்றால் 5 வருடங்களாக தெரியும். எதிரி எந்த ஊரில் வசிக்கிறார் என்ற தெரியுமா என்றால் திருப்பத்தூரில் வசித்து வருகிறார். என்ன பணி செய்கிறார் என்றால் கெஜல்நாயக்கன்பட்டி உயர்நிலைப்பள்ளியில் ஆசிரியராக பணிபுரிந்து வருகிறார். நான் என்ன பணி செய்கிறேன் என்றால் இரயில்வேயில் சப்கான்ராக்ட்டில் canteen நடத்தி வருகிறேன். இதை தவிர வேறு தொழில் செய்து வருகிறேன் என்றால் வேறு எதுவும் இல்லை. நான் பிறதி மாதம் மாதந்திர சீட்டு நடத்தி வந்தேன் என்றால் இல்லை. சாந்தினி என்பவரும் என்னிடம் சீட்டு தொகை செலுத்தி உள்ளார் என்றால் இல்லை. நான் பிரதிமாதம் ரூ.25,000/- சீட்டு நடத்தி வநதேன் என்றால் சீட்டே நடத்தியது கிடையாது. சாந்தினி என்பவரும் என்னிடம் பிரதிமாதம் சீட்டு தொகை செலுத்தி உளளார் என்றால் நான் சீட்டு நடத்தியதே கிடையாது.

எதிரி இந்த சீட்டு நடத்துவதற்காக என்னிடம் கணினியின் மூலம் மாதந்திர தவணை செலுத்தி வந்தார் என்றால் இல்லை. சாந்தினி என்னிடம் கொடுத்த சீட்டு பணத்தை எதிரிக்கு ரூ.3/- வட்டிக்கு கொடுத்துள்ளேன் என்றால் அவ்வாறு கிடையாது. எனக்கும் சாந்தினிக்கும் எதிரி ஆன்லைன் மூலம் மாதந்திர தொகை செலுத்தியுள்ளார் என்றால் இல்லை. சீட்டு நடத்தியதற்காக மேல்பொருப்பிற்காக கொடுக்கப்பட்ட காசோலையை சாந்தினியிடம் இருந்து பெற்றுக்கொண்டு இந்த வழக்கை நான் தாக்கல் செய்துள்ளேன் என்றால் அவ்வாறு இல்லை. சீட்டு நடத்துவதே எனக்கு தெரியாது.

**எதிரிதரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கு இணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.**